2023 ஏப்ரல் 12]

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதியில் அமைந்துள்ள இந்தக் குடியிருப்புப் பகுதியின் மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களிடம் பேசி, அனைவரிடமும் ஒப்புதல் பெற்று, இந்தத் திட்டத்தை முழு வீச்சில் நடைமுறைப்படுத்துவதற்காக நான் முனைப்புக் காட்டுவேன் என்று உறுதியளிக்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

150—

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம்

***15277—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கணினிப் பயிற்சி பெற்ற பணியாளரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின்கீழ் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டுவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு கணினிப் பயிற்சி பெற்ற ஒரு பணியாளரை தனியே நியமனம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் கணினி புரட்சிக்கு வித்திட்டவர்*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கைவிடப்பட்ட நிலையில், கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாயிகள், ஏழையெளிய மக்களுக்கு சேவையாற்றி வருவது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளே ஆகும். இந்தச் சங்கங்கள் வாடிக்கையாளர்களின் சேவைகளைத் துரிதப்படுத்தவும், அரசின் நலத் திட்டங்களைக் கொண்டு செல்லவும், சங்கத்தின் நிதிநிலைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், பிற வங்கிகள், பிற நிதி நிறுவனங்களுடன் போட்டி போட்டு சங்கங்கள் வளர்ச்சியடையவும் கணினிமயமாக்கல், மின்னணு பரிவர்த்தனை மிகவும் அவசியமாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டாலும், கணினி பற்றிய அடிப்படை கல்வி பயிலாத, கல்வித் தகுதி குறைவாக உள்ளதால் இப்பணியினை முழுமையாக அவர்கள் செய்ய இயலவில்லை. அதனால், இன்றுவரை தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாகக் கணினிமயமாக்கப்படாமல் காகித நோட்டுகளில், தங்களது பணப் பரிவர்த்தனைகளைப் புரிந்து வருகின்றன. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களில் கணினி அறிவியல் பட்டம் பெற்றவர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கணினிப் பயிற்சி பெற்றவர்களை நியமிக்க வேண்டுமென்று நல்ல எண்ணத்தோடு சொல்லியிருக்கிறார். ஆனால், 2001 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பின் அடிப்படையில் இப்போது பணிகளுக்கு வரன்முறை செய்யப்பட்டு, கணினிப் பயிற்சியில் பட்டயப் படிப்பு பெற்றவர்களாகத்தான் தேர்வு செய்கிறோம். குறிப்பாக, ஏவலர் பணியிடம் மற்றும் காவலர் பணியிடம் இவை தவிர்த்து மற்ற அனைத்துப் பணிகளிலும் நியமிக்கப்படுபவர்கள் அந்தக் கணினிப் பயிற்சி பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே, தனியாக அதற்கு ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி பெரும்பான்மையாக மலை கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதியில் ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில், கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து படித்திட சுமார் 100 கிலோ மீட்டர் தூரமுள்ள காட்பாடி பகுதிக்குச் செல்லவேண்டியிருப்பதால், திருப்பத்தூர் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையினுடைய நோக்கமே கிராமப் பகுதி மக்கள் அதிலும் குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் இவர்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக இயங்குகின்ற துறை. ஆகவே, அந்தத் துறையில், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் பணியாற்றுவதற்கான வாய்ப்பையும் உருவாக்குவதற்கு கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் படிப்புகள் படிப்பதற்கான ஒரு பயிற்சி நிலையம் துவங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் அதேபோன்ற ஒரு பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது. தேவையேற்படின் ஆய்வு செய்து, எதிர்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]